அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் ................................... 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

நீ..நீயாக இரு.......................................................2

இல்லறம் இனிக்க..................................................3

மக்கள் சக்தி இயக்கம் ................................... 5

கவிதைகள். ........................................................ 6

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## பேரறிஞர்களுக்கு முலாம் பூசாதீர்கள்!

உலகில் எண்ணற்ற பேரறிஞர்கள் தோன்றி மக்களை வழிநடத்தி உள்ளனர். அவர்களில் சிலர் மதங்களைத் தோற்றுவித்து, அவற்றிற்கென நெறிமுறைகளை உருவாக்கி அதன்வழியில் மக்களிடையே கொள்கைகளைப் பரப்பினார்கள். அவர்களின் நோக்கம் உயர்வானதுதான். மக்கள் ஒரு கட்டுக்கோப்பான வாழ்வு முறையைப் பின்பற்றி ஒழுகவேண்டும் என்று எண்ணி மதக்கருத்துகளை முன்வைத்தார்கள். அதில் தவறேதுமில்லை.

ஆனால், மனிதர்கள் வாளாயிருப்பார்களா? கட்சிக்கு ஆள் பிடிப்பதுபோல் கூட்டம் சேர்த்தார்கள். தங்கள் மதமே மேலானது என்று சண்டையிட்டுக் கொண்டார்கள். எதிர்கருத்து கொண்டிருந்தவர்களை கொன்றார்கள். சமண முனிவர்கள் பலர் கொல்லப்பட்டதும் இந்தப் புண்ணியப் பூமியில்தான் நடந்தது. மதங்களும், மதங்களும் மோதிக் கொள்வதைவிட, ஒரே மதத்தின் கிளைகளுக்குள்தான் வெறியாட்டம் அதிகம் நடைபெற்றது. சைவர்களும், வைணவர் களும் ஒருவருக்கொருவர் பகை கொண்டிருந்தார்கள் என்பது வரலாறு. புராணம் அல்ல!

சமூக சீர்திருத்தம் பேசிய புத்தரின் போதனைகள் திரித்துக் கூறப்பட்டன. உண்மையான சிந்தனையாளர் வள்ளலார் மீது வழக்கு தொடரப்பட்டது. இவற்றுக்கெல்லாம் பின்னணியாக இருந்தது... சிலர் கொண்டிருந்த தீவிர மதவெறி!


இப்பொழுது அதே மதவெறியாளர்கள், திருவள்ளுவரைத் தொட்டுப்பார்க்க முனைந்திருக்கி றார்கள். மதம், மொழி, இனம் கடந்து மனித வாழ்வியல் அறங்களை எக்காலத்துக்கும் பொருந்துமாறு உரைத்தவர் திருவள்ளுவர் ஒருவரே!

திருக்குறள் இந்தியாவுக்கும் பொருந்தும், இங்கிலாந்துக்கும் பொருந்தும். ஆனால் உன் மதம் மக்களைப் பிரித்து வைத்து அதில் குளிர் காய்வதற்கு மட்டுமே உதவும்.

திருவள்ளுவர் நினைத்திருந்தால், ஒரு மதத்தை உருவாக்கியிருக்க முடியும். அவர் காலத்தில் இந்து மதம் என்ற ஒன்றே கிடையாது. என்பதை நினைவில் கொள்க. உலக மக்கள் அனைவரும் மனிதப் பண்போடு வாழவேண்டும் என்ற சிந்தனையோடு திருக்குறளை அருளிய பேரறிஞர் அவர். எல்லோர்க்கும் பொதுவானவர் அவர். அப்படிப்பட்ட திருவள்ளுவரை ஓர் இந்து சாமியார் போல் புனைய முயல்வதையும், அவருக்கு காவி அணிவிப்பதையும் அறிவார்ந்த சமூகம் ஏற்றுக் கொள்ளாது. திருவள்ளுவர் காலத்தில் காவி உடை என்பதே தமிழ்நாட்டில் கிடையாது என்ற அடிப்படை அறிவுகூட அந்த அறிவிலிகளுக்கு இல்லை. அவர்களின் நோக்கம் எல்லாம் எப்படியாவது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி, மக்களைத் திசை திருப்பிவிட முடியாதா என்பதுதான்.

மதவெறியர்களிடம் ஒன்று கேட்கிறேன். சிவபெருமானுக்கு நாமமும், பெருமாளுக்கு பட்டையும் அணிவித்தால் ஏற்றுக் கொள்வீர்களா? சிவபெருமான் மீதோ, பெருமாள் மீதோ, மற்ற தெய்வங்கள் மீதோ நமக்கு எவ்வித வருத்தமும் கிடையாது. ஆனால் தாம் வணங்கும் தெய்வங்களின் கூட்டமைப்பான “மதம்” கூறும் வழிமுறைகளையே வாழ்க்கையில் கடைப்பிடிக்க இயலாமல், திருவள்ளுவரையும் அந்தக் கூட்டணியில் இணைக்க வீண் முயற்சி மேற்கொள்பவர்களைப் பார்த்துதான் பரிதாபமாக உள்ளது.

திருவள்ளுவர் யார்? மனிதன் படைத்த கடவுள் அல்லர்! மனிதன், மனிதனாக வாழ வழி காட்டியப் பேரறிஞர். அவருக்கு காவி முலாம் பூச நினைப்பதை விட்டுவிட்டு இரண்டு திருக்குறளையாவது படித்து அதன்படி வாழ்ந்து வாழ்க்கையில் முன்னேறப் பாருங்கள்!



(தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற திருவள்ளுவர் படத்தை திரித்து வெளியிடு வோர் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்) ..........ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ!


டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

மனித மனம் பலவிதங்களில் முடக்கப்படுகிறது. புதியனவற்றை வரவேற்பதில் இருக்கும் பயம் ஒருவகை முடக்கம். இது தெரிந்த விடயம், இது தெரிந்த பாதை என்று பாதுகாப்பாகச் செயல்படுகின்றோமே அது ஒரு வகை முடக்கம். வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு அதன் பின்னால் அன்றாட வாழ்க்கையை அமைத்துக் கொண்டு பத்திரமாக நெருக்கடியுடன் வாழ்கிறோமே அதுவும் முடக்கம்தான்.

எல்லாவற்றிலும் முதலில் நம் மனத்தை முடக்கி விடுகிறோம். இப்படி முடக்கப்பட்டவர்களாலேயே இவ்வுலகம் நிரம்பி இருக்குமானால் உலகம் முன்னேறி இருக்காது. புதுமை பிறந்திருக்காது.

“மனிதன் எப்படிப் பறக்க முடியும்? பறப்பதாயிருந்தால் கடவுள் சிறகைத் தந்திருக்க மாட்டாரா?” என்று கேட்பார்கள் முடக்கப்பட்டவர்கள். “மனிதன் இதுவரை பறந்ததில்லை, ஆகவே மனிதன் பறக்க முடியாது” என்று காரண காரியம் காட்டும் நடைமுறை உலகில் வாழ்பவர்கள் அவர்கள்.

பறவை பறக்கிறது. ஏன் மனிதன் பறக்கக் கூடாது? என்று கேள்வியை எழுப்பினானே அவன் புதுமை விரும்பி, துணிச்சல் நிறைந்தவன், கற்பனை மிகுந்தவன். சாதாரண உலகின் கட்டுப்பாடுகள் அவனைச் சங்கிலி போட்டுப் பிணைப்பதில்லை. ஆம்! அத்தகைய அசாதாரண மனிதர்களினாலேயே சாதனைகள் பிறந்திருக்கின்றன. தொலைபேசியும், விமானமும், வாகனமும், சந்திரமண்டலப் பயணமும் அவனாலேயே சாத்தியமாகியிருக்கிறது. அவனால்தான் உலகம் வளர்கிறது.



## நீ..நீயாக இரு!

முனைவர்.லெ.பாஸ்கர்

பட்டு போல் பருத்தி இல்லைதான். ஆனால் வெயிலுக்கு சுகமென்னவோ பருத்தி ஆடைதான்.–நீ நீயாக இரு!

நாய்க்கு சிங்கம் போல் வீரமில்லைதான். ஆனால் நன்றியென்னவோ நாய்க்குதான் அதிகம் - நீ நீயாக இரு!

காகம், மயில்போல் அழகில்லைதான். ஆனால் படையல் என்னவோ காக்கைக்குத்தான். நீ நீயாக இரு!

கங்கை நீர் புனிதம் எனப்படுகிறது. ஆனால் கிணற்று நீர் வீண் என்று அர்த்தமில்லை. தாகத்தில் தவிப்பவனுக்கு கங்கையாயிருந்தால் என்ன? கிணற்று நீராயிருந்தால் என்ன? -நீ நீயாக இரு!

தங்கம் விலை அதிகம்தான். தகரம் விலை மலிவுதான். ஆனால் தகரத்தைக் கொண்டு செய்வதை, தங்கம் கொண்டு செய்ய முடியாது. அதனால் தங்கமும் உயர்வில்லை, தகரமும் மட்டமில்லை. ஆகவே, நீ நீயாக இரு!

ஆகாயம் போல் பூமி இல்லை. ஆனால் நீ வாழ்வதற்குப் பூமியை விட்டால் வேறில்லை. ஆகவே, நீ நீயாக இரு!

நேற்று போல் இன்று இல்லை!

இன்று போல் நாளையில்லை!

நீ நீயாக இரு! நம்பிக்கையுடன் இரு! நல்லவனாக இரு! நாணயமானவனாக இரு!

இல்லாததை நினைத்து நொந்துக் கிடப்பதைவிட, ஏங்கித் தவிப்பதைவிட, உன்னில் இருப்பதை வைத்து வாழ்வில் முன்னேறு! நீ நீயாக இருந்து முன்னேறு!



## நுழைவாயில்.

சென்ற இதழ் தொடர்ச்சி....

தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் விரும்புவது தலைவியின் தோழி மூலமும் தலைவனின் தோழன் மூலமும் இருவரது பெற்றோர்களுக்குத் தெரியவர, இருவீட்டாரும் திருமணம் பேசிமுடித்து ஊரறிய நடத்தி வைத்துள்ளனர்.

அன்றையச் சமூகம் தாய்வழிச் சமூகம். பெண்ணுக்குத்தான் முதல் மரியாதை!. இன்று மாப்பிள்ளை வீட்டார் தங்களைப் பெரிதாகக் காட்டிக் கொள்வது போன்ற நிலை அன்று இல்லை. மாப்பிள்ளை வீட்டார் முறைப்படி பெண் கேட்டுவந்து பெண்ணின் தந்தைக்குப் பொருள் கொடுத்து திருமணத்தை உறுதி செய்துள்ளனர்.

திருமணத்துக்குப் பின்பு இல்வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதை நாம் இங்கே நினைவு கூர்தல் வேண்டும். கணவன் எப்பொழுதும் தன் அருகிலேயே இருக்க வேண்டும்; தன்னைப் பிரிந்து எங்கும் செல்லக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர்களாக அக்கால மகளிர் இருந்துள்ளனர். அதற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியம் கலித்தொகையில் காணப்படுகின்றன. மருதநிலத்து வாழ்க்கையில், கணவன் பரத்தையிடம் தொடர்பு வைத்துள்ளதைக் கடிந்துரைத்து ஊடல் கொள்ளும் மனைவியைப் பற்றியப் பாடல்கள் பல உள்ளன.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் இல்லறப் பண்பாடு மருதநிலத்தின்கண் மீறப்பட்டிருந்தாலும், தன் மனைவியைக் கணவன் சந்தேகப்பட்டான் என்று ஓர் இடத்தில்கூட, சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை.

சங்க காலத்துக்குப் பிறகு வந்த காலக்கட்டத்தில் குறிப்பாக 12 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, இன ஊடுருவல் அதிகமான போது, பெண்களுக்கான சுதந்திரம் படிப்படியாகக் குறைந்துவந்து 18 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலும் பெண்களின் விருப்பம் என்னவென்று கேட்கப்படாமலே திருமணங்கள் பேசி முடிக்கப்பட்டன.

ஆனால், இன்று நிலைமை அப்படியில்லை. பெண்கள் ஆண்களுக்கு நிகராகப் படிக்கிறார்கள்; வேலைக்குச் செல்கிறார்கள்; திருமணத்தை முடிவு செய்வதில் சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள். ஆக, காலம் எதுவாக இருந்தாலும், அன்புதான் இனிய இல்லறத்தின் ஆணிவேராக இருந்துள்ளது.

வாழ்க்கை முழுவதும் கசப்புணர்வுடன் வாழ்வதற்கா திருமணம் செய்கிறோம்? குடும்பம் என்ற கூட்டில் “இனிமை” விளக்கேற்றி ஒளிவிளங்க வாழ்வதுதான் இல்லறம்!

கணவன்-மனைவி இருவரின் ஒருமித்த அன்பில்தான் இல்லறம் இனிமையாகும். இருப்பினும் சில வழிகாட்டுதல்களும் தேவைப்படுகின்றன. அவற்றை எடுத்துக் கூறுவதே இத்தொடரின் நோக்கம்.

...........தொடரும்

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- முல்லைக்கலி

ஏறு தழுவும் (ஜல்லிக்கட்டு) காட்சிகளை, முல்லைக்கலி, சித்திரம் போல் நம் கண்முன்னே வடித்துக் காட்டுகிறது. ஒருவனுக்கு ஏறுதழுவும் ஆற்றலும், ஆசையும் மிகுதியாக இருக்கின்றது. ஆனால் அவனுக்கோ ஏறுதழுவும் முறையில் போதிய பயிற்சி இல்லை. அவன் ஒரு ஏற்றைத் தழுவ முயன்று, இயலாமல், நிலத்திலே வீழ்ந்துவிடுகிறான். அவன் நிலையைக் கண்ட அந்த எருதோ, தன் முன்னே புண்பட்டுக் கிடக்கும் அவனை ஒன்றும் செய்யாமல் திரும்பிவிடுகிறது. இந்தக் காட்சி எப்படி இருக்கிறது என்றால், போர்க்களத்திலே தன் வாள் முனையில் அகப்பட்ட எதிரி ஒருவனை, "இவன் என் நிலைக்குத் தகுதியற்றவன், இவனைக் கொல்லேன்" என மறத்தலைவன் விட்டுச்செல்வது போல் உள்ளது என உவமை யழகுடன் பாடுகிறார் புலவர்.

**தாள் எழு துணி பிணி இசை தவிர்பு இன்றித் தலைச் சென்று,**
**தோள் வலி துணி பிணி, துறந்து இறந்து எய்தி, மெய் சாய்ந்து,**
**கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான்மேல் செல்லாது,**
**மீளும் புகர் ஏற்றுத் தோற்றம் காண் - மண்டு அமருள்**
**வாள் அகப்பட்டானை, ஒவ்வான் எனப் பெயரும்**
**மீளி மறவனும் போன்ம்**. (புகர் என்பது எருதின் நிறம்)

அந்தக் காலத்தில் ஏறுதழுவுதல் நடைபெற்ற இடம் "தொழுவம்" என்றே அழைக்கப்பட்டுள்ளது. தொழுவினுள் ஏறுகள் சுழன்று சுழன்று சுற்றிக் கொண்டிருக்கின்றன. இளைஞர்கள் தொழுவினுள் சீறிப் பாய்கின்றனர். ஏற்றின் கொம்பைப் பற்றி மார்புடன் தழுவிக்கொள்கின்றனர் சிலர்; திமில் முறியும்படி தழுவுகின்றனர் சிலர்; ஏற்றின் கழுத்தை இறுகப் பற்றிக் கிடக்கின்றனர் சிலர்; தோளுக்குள் கழுத்தைப் புகவிட்டுப் பிடிக்கின்றனர் சிலர்; கொம்புகள் தம் உடலின் மேல் பாய்வதை அஞ்சாது ஏற்றுக் கொள்கின்றனர் சிலர். ஏறுகள் மட்டும் வாளாயிருக்குமா என்ன தம்மைப் பிடிக்க முயலுகின்றவர்களை எதிர்த்துப் போராடியும், கொம்பால் குத்தியும், எமனைப் போல் அச்சம் கொள்ளச் செய்கின்றன.

**ஆர்பு, உடன் பாய்ந்தார், அகத்து**
**மருப்பில் கொண்டும், மார்பு உறத் தழீஇயும்**
**எருத்திடை அடங்கியும், இமில் இறப் புல்லியும்,**
**தோள் இடைப் புகுதந்தும், துதைந்து பாடு ஏற்றும்**
**நிரைபு மேல் சென்றாரை நீர் மருப்பு உறச் சாடி**
**கொள இடம் கொள விடா நிறுத்தன, ஏறு**
**கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்தி,.........**
**உயிர் உண்ணும் கூற்றமும் போன்ம்!**

சங்க காலம் தொட்டு இன்றுவரை ஏறுதழுவுதல் நடைபெறுவது நமது பெருமை!....தொடரும்






**திருவள்ளுவர் திருநாளை** முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட ம.ச.இ, லட்சுமி பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை சார்பாக **பட்டிமன்றம்** 11.01.26 அன்று நடைபெற்றது. திருக்குறளில் விஞ்சி நிற்பது இல்லறச்சிந்தனையே! என்ற அணியில் மரு.சு.மாரிமுத்து, தலைமையாசிரியர் திருமதி.உமாகாசித்தங்கம் ஆகியோர் பேசினர். அரசியல்சிந்தனையே! என்ற அணியில் மரு. த.இராசலிங்கம், மரு.பூங்கோதை ஆகியோர் பேசினர். நடுவராக புலவர். பே.சங்கரலிங்கம் அவர்கள் அரசியல்சிந்தனையே! என்று தீர்ப்பளித்தார். 110 பேர் கலந்து கொண்ட விழாவில் தமிழமுத விருந்தோடு, இரவு விருந்தும் மருத்துவமனை வழங்கி மகிழ்ந்தது.












புதியம்புத்தூர் தங்கம் மருத்துவமனையில் நல்லிணக்க தைப்பொங்கல் விழா. திருமதி. உலகம்மாள், திருமதி.எலிசபெத், திரு. முகமதுஅலி ஆகியோர் முன்னிலையில்

திருவள்ளுவர் சிலைக்கு தூத்துக்குடி.ம.ச.இ பண்பாளர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பெரம்பலூர் ம.ச.இ சார்பாக விஸ்வக்குடி நீர்த் தேக்கம் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. மாவட்டச் செயலாளர் சிவக்குமார், பொருளாளர் வெங்கடாசலம், ஆலோசகர் செ.வைரமணி, ஒன்றியச் செயலர் ஆர்.இரவி மற்றும் பண்பாளர்கள் ஆரோக்யம், செல்வேந்திரன், சீமான், சுப்பிரமணி, பாஸ்கர், இயக்க குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

## மழலைச் செல்வம்...

முத்தென செல்லமாய்
முத்தமே தந்திட

கொத்தென பூச்சரம்
கொஞ்சமா நஞ்சமா?

கற்கண்டு இனிப்பில்
கண்முன் பேசிடும்

சர்க்கரை சுவையென
சங்கீத இசையென

மனதைக் கொள்ளை
மகிழ்ச்சியில் கொண்டிடும்

பொங்கிடும் வெள்ளமாய்
தேன்வடியும் இதழ்கள்!

தாலாட்டுப் பாட்டு
தொட்டிலில் கேட்டு

தாய்மனம் பாகாய்ப்
பாடலில் உருகும்

குயிலாய் கிளியாய்
மைனாக் குஞ்சாய்

மயிலாய் மானாய்
முயலாய்த் துள்ளும்

கொஞ்சிடும் ஆசைகள்
கண்களில் பெருகும்

சிரிப்பொலி சரங்களாய்
நெஞ்சையே அள்ளும்!

**கவிஞர்.கலியுகன் கோபி**

## புத்தாண்டுப் புதுமைகள்

புல்வெளியின் பனித்துளிகள்
குளிர்ந்தது போதும்
கொதித்திடுங்கள்!

நிழல்தரு மரங்களே!
நிம்மதியாக நீண்ட
ஓய்வெடுங்கள்!

ஆழ்கடலின் மீன்களே!
தரையிலும் வாழப்
பழகிடுங்கள்!

ஊர்வன எல்லாம்
உயரே கொஞ்சம்
பறந்திடுங்கள்!

பறவைகளே நீங்கள்
பாடியது போதும்
பயின்றிடுங்கள்!

விலங்குகளே நிலத்தில்
வீடுகட்டி ஒன்றாய்
வாழ்ந்திடுங்கள்!

ஆறறிவு மனிதமனம்
அழுக்கடைந்து வருவதால்
ஓரறிவும், ஐந்தறிவும்
உலகை ஆள வாருங்கள்!

**மரு.த.இராசலிங்கம்**